**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No. 91/2017

Deposition Of Witness for

Prosecution PW 3
Defense
Court

Name செல்லதுரை

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of February 2021.

நான் கீழநாச்சான்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய உறவினர்கள். அ.சா. 1 என்னுடைய உறவினர். 4, 5 வருடங்களுக்கு முன்னால் சண்டை நடந்தது ஏன் எதற்காக நடந்தது என எனக்கு தெரியாது. நான் தான் விலக்கிவிட்டேன். சண்டையில் யார் யாரை அடித்தார்கள் என்று கவனிக்கவில்லை. போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

அ.சா.2 முத்துகுமார் உங்கள் பெரிய மாமனார் என்றால் சரிதான். அ.சா.2 ன் தம்பி பெயர் கண்ணன் என்றால் சரிதான். கண்ணனும், அ.சா.1 ம் உங்கள் மைத்துனர் என்றால் சரிதான் அனைவருமே என் உறவினர்கள் தான். நீங்கள் சொன்ன மாதிரி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் வீட்டில் உள்ள சாக்கடை சம்பந்தமாக அடிக்கடி பிரச்சனை நடக்கும் என்றால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை